# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR
# O.S. No.759/2022
# Deposition of Witness for the Plaintiff – PW1

| | | | |
|---|---|---|---|
| **Name:** | **முனியப்பன்** | **Caste:** | |
| **Father/ Husband Name** | **பெருமாள்** | **தொழில்** | கல்லூரி பேராசிரியர் ( ஓய்வு) |
| **Village:** | **காந்திகிராமம் தெற்கு** | **Religion:** | |
| **Taluk:** | **கரூர்** | **Age :** | 67 |

The Oaths Act 1969 (Act 44/1969) – இன் விதிமுறைகளின் படி 09.03.2026 நாளாகிய இன்று திரு.சி.வேடியப்பன். M.A.,M.L., முதன்மை சார்பு நீதிபதி அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என் தரப்பு சாட்சியத்தில் நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண பிரமான வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து, புரிந்து கொண்டு கையொப்பம் செய்தேன். நிரூபண பிரமான வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை என் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணத்தின் தன்மை | சான்றாவணம் |
|---|---|---|---|
| 1. | 16.08.2020 | பிரதிவாதி, வாதிக்கு எழுதிக்கொடுத்த ரூ.7,00,000/–க்கான கடனுறுதிச்சீட்டு அசல் | வா.த.சா.ஆ.1 |
| 2. | 15.08.2022 | வாதி, அவரது வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் அசல் அஞ்சல் ரசீதுடன் கூடியது | வா.த.சா.ஆ.2 |

| | | | |
|---|---|---|---|
| 3. | 18.08.2022 | பிரதிவாதி சட்ட அறிவிப்பை அவரது வீட்டு முகவரியில் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் | வா.த.சா.ஆ.3 |
| 4. | 18.08.2022 | பிரதிவாதி சட்ட அறிவிப்பை அவரது அலுவலக முகவரியில் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் | வா.த.சா.ஆ.4 |
| 5. | 17.08.2022 | பிரதிவாதி சட்ட அறிவிப்பை அவரது சம்பளதாரர் முகவரிக்கு பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் | வா.த.சா.ஆ.5 |
| 6. | 15.09.2022 | பிரதிவாதி, வழக்கறிஞர் சட்ட அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பியதற்கான postal returned cover அசல் | வா.த.சா.ஆ.6 |
| 7. | 24.10.2025 | கடவூர் தாலுக்கா, ஆதனூர் கிராமம், சர்வே எண். 611/ஏபி1 ஏ–ல் வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள இணையவழி பட்டா | வா.த.சா.ஆ.7 |
| 8. | 07.03.2026 | கடவூர் தாலுக்கா, ஆதனூர் கிராமம், சர்வே எண். 579/11பி மற்றும் 579/4 ஏ–ல் வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள இணையவழி பட்டா | வா.த.சா.ஆ.8 |
| 9. | 07.03.2026 | கடவூர் தாலுக்கா, ஆதனூர் கிராமம், சர்வே எண். 611/ஏபி1 ஏ–ல் வாதியின் பெயரில் வழங்கப்பட்ட இணையவழி பட்டா | வா.த.சா.ஆ.9 |
| 10. | 08.03.2026 | தமிழ்நாடு அரசு புதிய ஹெல்த் இன்சூரன்ஸ் ஸ்கிம் அடிப்படையில் வாதி பெயரில் உள்ள ஓய்வூதிய அடையாள அட்டையின் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு நகல் குறியீடு செய்யப்படுகிறது. | வா.த.சா.ஆ.10 |

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை</u>**

நான் பாண்டு மீது கடன் கொடுத்தால், அந்த கடன் தொகையை வசூலிக்க வேண்டி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதியை, முத்துசாமி மகன் ஜெகநாதன் என்பவர் மூலம் எனக்கு தெரியும். முத்துசாமி மகன் ஜெகநாதன் மரவள்ளி கிழங்கு வாங்குவதற்காக எங்கள் ஊருக்கு வருவார். அப்போது அவருடன் எனக்கு பழக்கம் ஏற்பட்டது. முத்துசாமி மகன் ஜெகநாதன், கதவு எண். 7/358, வாவ்வால் தோப்பூர், பொட்டநேரி அஞ்சல், மேட்டூர்தாலுக்கா என்ற முகவரியில் வசித்து வருகிறார். முத்துசாமி மகன் ஜெகநாதன் என்பவருக்கு பிரதிவாதி, செண்பகவள்ளியை எவ்வாறு தெரியும் என்றால், ஜெகநாதன் காய்கறி வியாபரம் செய்வார். நங்கவள்ளி மார்க்கெட்டுக்கு அவர் செல்லும் போது செண்பகவள்ளியுடன் பழக்கம் ஏற்பட்டது. செண்பகவள்ளி நங்கவள்ளி மார்க்கெட்டில் என்ன வியாபாரம் செய்து வருகிறார் என்றால், அவர் அங்கு வியாபரம் செய்யவில்லை. காய்ககறி வாங்க செல்லும் போது பழக்கம் ஏற்பட்டது. ஜெகநாதன் என்பவர் செண்பகவள்ளியை எனக்கு அறிமுகம் செய்தபோது, அவரை எனக்கு 2 ஆண்டுகளாக தெரியும் என்று கூறினார். ஜெகநாதன் என்பவர் பிரதிவாதிக்கு ரூ. 7,00,000 தொகை கடனாக தேவைப்படுவதாக என்னிடம் கூறினார். ஜெகநாதன் என்பவர் கூறியவுடன் நான் அவருக்கு கடன் கொடுத்தேனா என்றால், 3 மாதத்திற்கு முன்பாக ஜெகநாதன் என்னிடம் கூறினார். நான் 3 மாதம் கழித்து பிரதிவாதிக்கு கடன் தொகையை வழங்கினேன். கடந்த 16.08.2020ம் தேதியன்று பிரதிவாதிக்கு கடன்கொடுத்தேன். ஜெகநாதன் என்பவர் என்னை நேரடியாக அனுகி தான் பிரதிவாதிகக்கு தொகை கடனாக தேவைப்படுவதை பற்றி கூறினார். கடந்த 16.08.2020ம் தேதிக்கு 3 மாதங்களுக்கு முன்பாக, அதாவது ஏப்ரல் மாதம் 2020ம் வருடத்தில் ஜெகநாதன், பிரதிவாதிக்கு கடன் தொகை தேவைப்படுவதை எனக்கு தெரித்தவாரா என்றால், ஆமாம். பிரதிவாதியை ஜெகநாதன் என்பவர் மூலம் தான் தெரியும். வேறு யார் மூலமும் அவரை

தெரியாது என்றால், சரிதான். நான் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பில், பிரதிவாதியை நீண்ட நாட்களாக தெரியும் என்றும், அதனால் பிரதிவாதிக்கு ரூ. 7,00,000 கடன் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். நான் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பில் ஜெகநாதன் என்பவர் மூலமாகத்தான் பிரதிவாதியை தெரியும் என்றும், அவர் கூறியதின் பேரில் தான் நான் பிரதிவாதிக்கு ரூ. 7,00,000 கடன் கொடுத்தாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரிதான். பிரதிவாதிக்கு எத்தனை குழந்தைகள் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால், 2 பெண் குழந்தைகளும், 2 ஆண் குழந்தைகளும் உள்ளார்கள். அவர்களது பெயர் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் 2 பெண் குழந்தைகளும், 2 ஆண் குழந்தைகளும் இளவர்கள் என்று சொன்னால், அதை பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி கடன் தொகை ரூ. 7,00,000 என் வீட்டிற்கு வந்து பெற்று சென்றார். பிரதிவாதி கடன் தொகை ரூ. 7,00,000 என் வீட்டிற்கு வந்து பெற்று சென்றபோது, ஜெகநாதன் என்பவர் உடனிருந்தார். பிரதிவாதி உயரமாகவும், சிவப்பு நிறமாகவும் இருப்பார் என்றால், சரியல்ல. பிரதிவாதி மாநிறமாகவும், சராசரி உயரமாகவும், சிறிதளவு குண்டாகவும் இருப்பார். பிரதிவாதி என்னிடம் தொகை கடனாக வேண்டும் என்று நேரடியாக கேட்டார். பிரதிவாதி என்னிடம் கடன் தொகையை கேட்டு, தொலைபேசியில் பேசினாரா என்றால், இல்லை. நேரில் வந்து கடன் கேட்டார். பிரதிவாதியை ஜெகநாதன் என்பவர் தான் என் வீட்டிற்கு அழைத்து வந்தார். நான் பிரதிவாதிக்கு 3 மாத காலத்தில் எவ்வாறு தயார் செய்து, கொடுத்தேன் என்றால், நான் ஓய்வு பெற்ற பலன்களை வைத்திருந்தேன் மற்றும் விவசாயம் செய்து வருவதால் அந்த வருமானத்தில் இருந்து கடன் கொடுத்தேன். நான் கடந்த 2020 ம் வருடம் பணியில் இருந்தேனா அல்லது ஓய்வு பெற்றேனா என்றால், பணி ஓய்வு பெற்றேன். நான் பணி ஓய்வு பெற்றதற்கு உண்டான ஆவணங்களை அசல் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான்கடந்த 2020 ம் வருடம் நான் பணியில் இருந்தேன் என்றும், நான் பணியில் இருந்ததால் பிரதிவாதிக்கு ரூ. 7,00,000 வரை கடன் கொடுத்திருக்க முடியாது என்றால், சரியல்ல. பிரதிவாதிக்கு நான்

எதனடிப்படையில் ரூ. 7,00,000 வரை கடன் கொடுத்தேன் என்றால், பிரதிவாதி ஆசிரியராக பணியாற்றி வருவதால் நான் கடன் வழங்கினேன். நான் ரூ. 7,00,000 த்தை என்னுடைய வங்கி கணக்கில் இருந்து எடுத்து, பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேனா என்றால், வங்கி கணக்கில் இருந்தும், என்னுடைய விவசாய வருமானத்தில் இருந்தும் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். நான் விவசாயம் செய்து வருவதற்கு உண்டான ஆவணங்கள் இவ்வழக்கில் என்தரப்பு சான்றாவணமாக தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரிதான். நான் அரசு கல்லுரியில் இணை பேராசிரியராக பணியாற்றி வந்தநிலையில், நான் விவசாயம் செய்து வந்ததாக கூறுவதும், ஜெகநாதன் என்பவர் மூலம்பிரதிவாதியை தெரியும் என்று கூறுவதும், முற்றிலும் பொய்யான சங்கதி என்று சொன்னால், சரியல்ல. நான் 2016 ம் வருடமே பணி ஓய்வு பெற்றேன். வா.த.சா.ஆ.7 முதல் 9 வரையிலான கணினி பட்டாக்களை நான் விவசாயம் செய்து வருவதாககூறி பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. பொதுவாக ஒருவருக்கு கடன் வழங்கும்போது, ரூ. 20,000 த்திற்கு மேல் கடன் வழங்கவேண்டும் என்றால், காசோலையாகவோ, அல்லது வரவு காசோலையாகவோ வழங்க வேண்டும் என்றும், ஆனால் நான் சட்டத்திற்கு விரோதமாக ரூ. 7,00,000—ஐ பிரதிவாதிக்கு ரொக்கமாக கடன் கொடுத்ததாக கூறுவது முற்றிலும் பொய் என்றால், சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கடன் தொகையை வாங்க வரும்போது, ஜெகநாதன் என்பவரும், கடனுறுதிச்சீட்டை எழுதிய விஸ்வநாதன் என்பவரும் உடனிருந்தார்கள். மேற்படி ஜெகநாதன் என்பவர் தான் தாவா கடனுறுதிச்சீட்டில் சாட்சி கையொப்பம் செய்தார் என்றால், சரிதான். ஜெகநாதன் என்பவர் வட்டிதொழில் செய்து வரும் நபர் என்று சொன்னால், சரியல்ல. ஜெகநாதன் மனைவி பெயர் தவமணி என்றால், அதை பற்றி எனக்கு தெரியாது. ஜெகநாதன் என்பவருக்கு மனோஜ் என்ற மகன் உள்ள விவரம் எனக்கு தெரியாது. ஜெகநாதன் மனைவிக்கும், பிரதிவாதியும் நண்பர்களாக இருந்தார்கள் என்றும், அவர்களுக்குள்ளே ஏற்பட்ட வரவு செலவின் போது ஏற்படுத்தப்பட்டது தான் வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டு

என்றால், சரியல்ல. ஜெகநாதன் என்பவரை நான் பிரதிவாதிக்கு கொடுத்ததாக கூறப்படும் ரூ. 7,00,000 கடன் தொகையை வசூலிக்க வேண்டி முகவராக நியமணம் செய்யவில்லை என்று சொன்னால், சரிதான். நான் ஜெகநாதன் என்பவரை முகவராக நியமிக்காத நிலையில் பிரதிவாதியிடமிருந்து கடன் தொகையையானது அவரது வங்கிகணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. கடந்த 16.08.2020 ம் தேதியன்று பிரதிவாதி என் வீடடிற்கு நேரடியாக வந்து ரூ.7,00,000–ஐ கடனாக பெற்று சென்றதாக பொய்யாக சாடசியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. ஜெகநாதனும், பிரதிவாதியும் என் வீட்டிற்கு வரும்போது பேருந்தில் தான் வந்தார்களா என்றால், இல்லை. காரில் வந்தார்கள். தாவா கடனுறுதிச்சீட்டை எழுதிய ராமசாமி மகன் விஸ்வநாதன் என்பவர் புதுக்கநல்லி, காருடையாம்பாளையம் போஸ்ட் என்ற முகவரியில் வசித்து வருகிறார். காருடையாம்பாளையம் என்ற ஊர் கரூரில் இருந்து சுமார் 10 கி.மீ துரத்தில் அமைந்துள்ளது. தாவா கடனுறுதிச்சீட்டை எழுதிய விஸ்வநாதன் என்பவர் பேருந்தில் தான் வந்தாரா என்றால், இல்லை. இரு சக்கர வாகனத்தில் வந்தார். கடந்த 17.08.2020 ம் தேதியன்று கொரோனா தொற்று அதிகளவில் இருந்ததால் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்வதற்கு மாவட்ட ஆட்சியரின் முன் அனுமதி பெறாமல் செல்ல முடியாது என்றும், அவ்வாறான காலகட்டத்தில் ஜெகநாதன் என்பவரும், பிரதிவாதி காரில் வந்ததாகவும், விஸ்வநாதன் என்பவர் இரு சக்கர வாகனத்தில் என் வீட்டிற்கு வந்ததாக கூறுவது, முற்றிலும் தவறு என்றால், சரியல்ல. கடந்த 17.08.2020 ம் தேதியன்று பிரதிவாதி பள்ளிக்கு சென்று வருகைபதிவேட்டில் கையொப்பம் செய்து பணி செய்தார் என்றும்,இந்நிலையில் கடநத 16.08.2020 ம் தேதியன்று பிரதிவாதி என் வீட்டிற்கு வந்து கடன் தொகையை வாங்கியதாக கூறுவது முற்றிலும் பொய் என்றால், சரியல்ல. பிரதிவாதி வாங்கியதாக கூறப்படும் ரூ. 7,00,000 கடன் தொகைக்கு வட்டி எதுவும் கொடுக்கவில்லை. நான் பிரதிவாதியிடம் ரூ. 7,00,000 கடன் தொகைக்கு வட்டி கொடுக்க வேண்டும் என்று நேரடியாக கேட்கவில்லை. ஜெகநாதன் என்பவர் மூலமாகத்தான் கேட்டேன். நான் பிரதிவாதிக்கு ரூ.

7,00,000 கடன் கொடுத்ததாக கூறப்படும்போது, நான் பிரதிவாதியிடம் வட்டி தொகையை கேட்காமல் ஜெகநாதன் என்பவரிடம் வட்டி தொகையை கேட்டதாக கூறுவதில் இருந்தே, நான் பிரதிவாதிக்கு ரூ. 7,00,000 கடன் தொகையை கொடுக்கவில்லை என்பது உறுதியாகிறது என்று சொன்னால், சரியல்ல. பிரதிவாதியிடம் தாவா கடன் தொகையை கொடுத்த போது, வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டை தவிர்த்து, வேறு ஆவணங்கள் எதுவும் நான் வாங்கினேனா என்றால், வீட்டு மனை ஆவணத்தின் நகல் ஒன்றை கொடுத்தார். பிரதிவாதி மல்லசமுத்திரம், பத்திரபதிவு அலுவலகத்திற்குட்பட்ட தன்வாள்பாளையம் சர்வே எண். 4/2 முருகன் நகர், மனை எண். 98–ன் ஆவணத்தை என்னிடம் கொடுத்தார். நான் சட்ட அறிவிப்பில் பிரதிவாதி என்னிடம் கொடுத்த ஆவணத்தில் கண்டுள்ள மனை எண். 98–ஐ மறைமுகமாக விற்பனை செய்தால், அவ்வாறு செய்யும் விற்பனை என்னிடம் வாங்கிய கடன் தொகையை கட்டுப்படுத்தாது என்று குறிப்பிட்டிருந்தேனா என்றால், இல்லை. நான் பிரதிவாதிக்கு அனுபபிய சட்ட அறிவிப்பில் பத்தி 4–ல் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட கடந்த 09.07.2014ம் தேதியிட்ட கிரய ஆவணத்தின் கண்டுள்ள சொத்தை எனக்கு தரவேண்டிய கடன் தொகையை தவிர்க்கும் பொருட்டு, மூன்றாம் நபருக்கு விற்பனை செய்ய முயற்சி செய்து வருவதாக நான் எவ்வாறு குறிப்பிட்டேன் என்றால், பிரதிவாதி ஆவணத்தின் நகல் என்னிடம் கொடுத்தால் நான் அவ்வாறு குறிப்பிட்டேன். நான் பிரதிவாதிக்கு கடந்த 15.08.2022 ம் தேதியன்று கடன் தொகையை கேட்டு பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பை கொடுத்தேன். கடந்த 07.01.2022ம் தேதியன்று மனை எண்.98–ஐ சந்திரா என்பவர் விஜயலெட்சுமி என்பவருக்கு எழுதி கொடுத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சொத்தை, பிரதிவாதி விற்பனை செய்ததாக சட்ட அறிவிப்பில் தவறாக குறிப்பிட்டு பிரதிவாதியை மிரட்டும் தோணியில் அறிவிப்பு கொடுத்திருந்தோம் என்றால், சரியல்ல. நான் பிரதிவாதிக்கும், அவர் வேலை பார்க்கும் நிர்வாகத்திற்கும் சட்ட அறிவிப்பு அனுப்பினேன். நான் பிரதிவாதி வேலை பார்க்கும் நிர்வாகத்திற்கு சட்ட அறிவிப்பை அனுப்பி வாங்காத கடன்

தொகையை பிரதிவாதியிடமிருந்து பெற வேண்டி, மிரட்டியுள்ளேன் என்றால், சரியல்ல.

**(கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுங்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.